மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்
முன்னிலை திரு.M.சிவராஜேஷ், B.B.A.L.L.B.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.
2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.321/2025
in
அ.வ எண்.80/2025

துரைராஜ் ......... மனுதாரர்/பிரதிவாதி

/ எதிர் /

S.சிவகுமார் .......... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது 17.09.2025அன்று இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ராஜன் சுபாசிஸ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.R.இளங்கோ அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

இம்மனுவானது கடந்த 01.09.2025 அன்று சமூகம் நீதிமன்றத்தில் தான் நேரில் ஆஜராகாத காரணத்தால் மேற்படி வழக்கில் தனது தரப்பில் ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம்:–**

2.1 தாவா வழக்கில் சமூகம் நீதிமன்றத்தில் தான் நேரில் ஆஜராவதற்காக கடந்த 01.09.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது. ஆனால் அன்றைய தேதியில் தனக்கு உடல்நிலை சரியில்லாததாலும், தனது வழக்கறிஞரை சந்திக்க இயலாத காரணத்தினாலும் தானும், தனது வழக்கறிஞரும் சமூகம் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக இயலாமல் போய்விட்டது. இதனால் கடந்த 01.09.2025 அன்று தனது வருகையின்மை காரணமாக மேற்படி வழக்கில் தனக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தனக்கு எதிராக மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கிரவு செய்யாவிடில் தனக்கு மிகுந்த

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.09.18 17:56:42 +0530

கஷ்ட நஷ்டம் ஏற்பட வாய்புள்ளது என மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்/வாதியால் எதிருரை இல்லை என்றும் நீதிமன்றம் நீதியின்பால் முடிவு செய்யலாம் என்று மேலெழுத்து செய்யப்பட்டது.

4. இம்மனுவில் தீர்மானிக்க படவேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரின் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

5. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியம், சான்றாவணங்கள் இல்லை.

6. தீர்வு:

மனுவானது கடந்த 01.09.2025 அன்று சமூகம் நீதிமன்றத்தில் தான் நேரில் ஆஜராகாத காரணத்தால் மேற்படி வழக்கில் தனது தரப்பில் ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கரவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாவா வழக்கில் சமூகம் நீதிமன்றத்தில் தான் நேரில் ஆஜராவதற்காக கடந்த 01.09.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்தது என்றும் ஆனால் அன்றைய தேதியில் தனக்கு உடல்நிலை சரியில்லாததாலும், தனது வழக்கறிஞரை சந்திக்க இயலாத காரணத்தினாலும் தானும், தனது வழக்கறிஞரும் சமூகம் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக இயலாமல் போய்விட்டது என்றும் இதனால் கடந்த 01.09.2025 அன்று தனது வருகையின்மை காரணமாக மேற்படி வழக்கில் தனக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தனக்கு எதிராக மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்தரவை நீக்கிரவு செய்யாவிடில் தனக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட வாய்புள்ளது என்று கூறியுள்ளதை கருத்தில் கொண்டும் இரு தரப்பினருக்கும் தங்களது வழக்கினை நிரூபிக்க ஒரு வாய்ப்புகொடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மனுதாரரின் மனுவை அனுமதிப்பது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரரின் செயலால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்திற்கு ஈடாக எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகை வழங்க உத்தரவிடுவதன் மூலம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டத்தை சரி செய்யலாம்

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.09.18 17:56:48 +0530

என்றும், இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதிக்கலாம் என தீர்மானித்து மனுதாரர்/பிரதிவாதி வரும் 24.09.2025ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூபாய் இரண்டாயிரம் (ரூ.2000/-) செலுத்தும் பட்சத்தில் இம்மனுவை அனுமதித்தும் தவறும் பட்சத்தில் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. அடுத்த வாய்தா 26.09.2025**

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ம் நாள் வியாழக்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.09.18 17:56:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் – இல்லை

SIVA RAJESH M
Digitally signed by SIVA RAJESH M
Date: 2025.09.18 17:56:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தான்குளம்.
இ.ம.எண்.321/2025இன்
அ.வ.எண்.80/2025
நேரிய/வரைவுஉத்தரவு
நாள் 18.09.2025